# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# அ.வ.எண். 117/2018

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4 ம் நாள் திங்கட்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

வ.சா.1. சுலோச்சனா.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் பெரவலூரில் குடியிருக்கிறேன். விவசாய கூலி வேலை செய்கிறேன். எனது சொத்து மங்காவரத்தில் உள்ளது. பெரவலூரிலிருந்து மங்காவரம் சுமார் 30 கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். என் தந்தை முனிவேல் தாயார் பெயர் அமாவாசை. அவர்கள் இருவரும் தற்போது உயிரோடு இல்லை. எங்கள் தாய் தந்தைக்கு நாங்கள் ஏழு பேர் பிள்ளைகள். அதில் ஆண்கள் 4 பேர் பெண்கள் 3 பேர். 1.தனராஜ், 2.தசரதன், 3.சிவமணி, 4.பஞ்சாச்சரம், 5.நான் சுலோச்சனா, 6.ஜோதி லட்சுமி, 7.ஜெயக்கொடி. மூன்று பெண்பிள்ளைகள்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் 32 செண்ட். இந்த நிலத்தை இன்றைய தேதியில் பிரதிவாதி பாஸ்டர் ஜெயாதான் பயிர் செய்கிறார் என்றால் சரிதான்.

2. இந்த வழக்கில் எனது சகோதரர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களிடம் இந்த வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கடிதம் எதுவும் வாங்கவில்லை. எனக்கு திருமணம் ஆகி 40 வருடங்கள் ஆகிறது. 40 வருடங்களாக நான் பெரவலூரில்தான் வசித்து வருகிறேன். 2 ம் வாதி வன்னிபாக்கத்தில் குடியிருக்கிறார். 3 ம் வாதி மீஞ்சூரில் குடியிருக்கிறார். எனது சகோதரிகள் சாதாரண குடும்பத்தை சார்ந்தவர்கள்தான். கூலி வேலை செய்துதான் பிழைக்கிறார்கள். வழக்கு செத்திற்கு நான் வரி செலுத்தியுள்ளேன். வழக்குச்சொத்திற்கு எனது தந்தை பெயரில் பட்டா உள்ளது. எனது சிறு வயது முதலில் அந்த பட்டா

உள்ளது. வரி ரசீது, சிட்டா அடங்கள் எனது வீட்டில் உள்ளது.

3. தாவா சொத்தை எனது தந்தை முனிவேல் எனது சகோதரர்கள் தன்ராஜ், தசரதன் ஆகியோர் பிரதிவாதியின் தகப்பனார் பொன்னுசாமிக்கு 07.08.1982 ல் கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக கும்மிடிபூண்டி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. 2017 ம் ஆண்டு நவமபர் மாதம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தேன். அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மூன்று பெண்பிள்ளைகளுக்கும் வழக்கு சொத்து பாதியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான்கு சகோதரர்களை நீக்கிவிட்டுதான் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.